முருங்கம்பாக்கம் கைவினை கிராம

# சதுப்புநில காடுகளில் பிளாஸ்டிக் குப்பைகள் அகற்றும் பணி

புதுச்சேரி, ஜூன்.3—
சதுப்புநில காடுகளில் பிளாஸ்டிக் குப்பைகள் அகற்றும் பணி நடைபெற்றது.

புதுவை அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை, காடுகள், வனவிலங்குகள் துறை சார்பில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, சதுப்பு நில காடுகளை தூய்மைப்படுத்தும் பணி தொடர்ந்து 10 நாட்கள் நடக்கிறது.

தேங்காய்திட்டு துறைமுக சாலையில் உள்ள சதுப்பு நில காடுகளை தூய்மைப்படுத்துதல், சுற்றுப்புற சூழலுக்குமிகுந்த தீங்கு விளைவிக்கும் கருவேலம் மரங்களை அகற்றும் பணியை சம்பத் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் துணை வன அலுவலர் குமரவேல் மற்றும் ஊழியர்கள் பங்கேளற்றனர். இன்று முருங்கப்பாக்கம் கைவினை கிராமத்தில் சதுப்பு நில காடுகளில் பிளாஸ்டிக் அகற்றும் பணி நடந்தது.

மாலைமலர் தேதி: 3.6.2023.

2